# GKR'S INSTITUTE

- DAILY CURRENT AFFAIRS
- WEEKLY CURRENT AFFAIRS
- MONTHLY MAGAZINE
- ONE LINER FOR CURRENT AFFAIRS
- TOPICWISE QUESTION
- MONTHLY QUESTION AND ANSWER

**16-11-2022**

**Wesite Link** : https://gkrsinstitute.com/

**Telegram Link** : https://t.me/gkrsInstitute

**Faceook Link** : https://www.facebook.com/தமிழில்-பயில்வோம்-UPSC-102987411064022/

## முக்கிய தினங்கள்

1. **16-11-22**
    - ❖ சர்வதேச சகிப்புத்தன்மை (1995 முதல்) தினம்.
    - ❖ ஜான் பிளெமிங் வெற்றிடக் குழாயைக் (1904) கண்டுபிடித்தார்.
    - ❖ யுனெஸ்கோ நிறுவனம் (1945) தொடங்கப்பட்டது.

## மாநாடு

1. **தேசிய இந்திய தீப்பெட்டி உற்பத்தியாளர்களுக்கான மாநாடு**
    - ❖ தேசிய இந்திய தீப்பெட்டி உற்பத்தியாளர்களுக்கான இரு நாள் மாநாடு தில்லி சூரஜ்குண்ட்டில் நடைபெற்றது.
    - ❖ தீப்பெட்டி உற்பத்தித் தொழிலுக்கு ஜிஎஸ்டி ( சரக்கு மற்றும்சேவை வரி) 18 சதவீதமாக இருந்தது. இந்த வரி 12 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.
    - ❖ இதையொட்டி, தேசிய தீப்பெட்டிஉற்பத்தியாளர்கள் சங்கம் சார்பில் நடைபெற்ற பாராட்டு விழாவில் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் கலந்து கொண்டு பேசினார்.
    - ❖ அப்போது அவர் கூறியதாவது: உலக அளவில் நூறு தீப்பெட்டிகள் இருந்தால் அதில் 30 சிவகாசி மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் தயாரிக்கப்பட்டவையாக இருக்கும்.
    - ❖ சங்கத் தலைவர் பரமசிவம் வரவேற்றுப் பேசுகையில், 'இந்திய தீப்பெட்டித் தொழிலுக்கு மற்றொரு சவாலாக சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்படும் லைட்டர்கள் வந்துள்ளன.
    - ❖ சீனாவில் ரூ.5-க்கு கிடைக்கும் இந்த லைட்டர்கள் ஒரு ரூபாய் ( ரூ.1) இன்வாய்ஸுடன் வரி ஏய்ப்புடன் இறக்குமதி செய்யப்படுவதோடு, ஒரு லைட்டர் 30 தீப்பெட்டிகளின் உற்பத்தியை அழித்துவிடும் நிலையை ஏற்படுத்துகிறது.
    - ❖ இதற்குத் தடைவிதிக்க மத்திய வர்த்தக அமைச்சரிடம் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது என்றார்.

## இந்திய செய்திகள்

1. **உலகின் மொத்த மக்கள்தொகை 800 கோடியை எட்டியது.**
    - ❖ உலகின் ஒட்டு மொத்த மக்கள்தொகை (நவ.15) 800 கோடியை எட்டியது. கடந்த 12 ஆண்டுகளில் மட்டும் மக்கள்தொகை 100 கோடி அதிகரித்துள்ளது.

- ❖ உலக நாடுகளில் வசித்து வரும் ஒட்டு மொத்த மக்களின் எண்ணிக்கை 800 கோடியை எட்டியுள்ளதாக ஐ.நா. மக்கள்தொகை நிதி அமைப்பு (யுஎன்எஃப்பிஏ) தெரிவித்துள்ளது.
- ❖ உலக மக்கள்தொகை **2037-ஆம் ஆண்டில் 900 கோடியையும், 2058-ஆம் ஆண்டில் 1,000 கோடியையும்** எட்டும் என ஐ.நா. அறிக்கையில் கணிக்கப்பட்டுள்ளது.
- ❖ 2022-ஆம் ஆண்டு நிலவரப்படி, உலக மக்கள்தொகையில் 142.6 கோடி பேரைக் கொண்டு **சீனா முதலிடத்தில்** உள்ளது.
- ❖ **இந்தியா 141.2 கோடி** மக்கள்தொகையுடன் இரண்டாவது இடத்தில் உள்ளது.
- ❖ 2023-ஆம் ஆண்டில் சீனாவைப் பின்னுக்குத் தள்ளி உலகின் பெரும் மக்கள்தொகை கொண்ட நாடாக இந்தியா மாறும் என ஐ.நா. தெரிவித்துள்ளது.
- ❖ அதே வேளையில், இந்தியாவில் மக்கள்தொகை வளர்ச்சி விகிதம் குறைந்து வருவதாகவும் ஐ.நா. தெரிவித்துள்ளது.
- ❖ இந்தியாவில் சராசரி கருவுறுதல் விகிதம் 2.2-லிருந்து **2-ஆக குறைந்துள்ளது**. நாட்டில் உள்ள 31 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்கள் நிலையான கருவுறுதல் விகிதமான 2.1 என்ற நிலையை அடைந்துள்ளதாக ஐ.நா. அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.
- ❖ நவீன குடும்ப கட்டுப்பாட்டு நடைமுறைகளே இந்தியாவில் கருவுறுதல் விகிதம் குறைந்ததற்கான முக்கியக் காரணமாகக் கூறப்பட்டுள்ளது.
- ❖ **மக்களின் சராசரி வயது**
  - ✓ இந்தியா---------------28.7
  - ✓ சீனா---------------------38.4
  - ✓ ஜப்பான்----------------48.6
  - ✓ உலக அளவில்---30.3
- ❖ **உலக மக்களின் சராசரி ஆயுள் காலம்**
  - ✓ 1990------64
  - ✓ 2019------72.8
  - ✓ 2050-------77.2 (கணிப்பு)
- ❖ **உலக மக்கள்தொகையில் முதியோர்**
  - ✓ 2022------------ 10%
  - ✓ 2050------------ 16%
- ❖ **இந்திய மக்கள்தொகை**
  - ✓ 15 முதல் 64 வயது-------68%
  - ✓ 65+------------------------------------7%

## 2. பழங்குடி இனத்தவர் கௌரவ தினம்

- பழங்குடி இனத்தைச் சேர்ந்த சுதந்திரப் போராட்ட வீரர் பிர்சா முண்டாவின் பிறந்த தினமான **நவ. 15-ஆம் தேதி 'பழங்குடி இனத்தவர் கௌரவ தினம்'** கொண்டாடப்படும் என்று மத்திய அரசு கடந்த ஆண்டு அறிவித்தது.
- அதன்படி மத்திய பிரதேசத்தின் ஷாடோல் மாவட்டத்தில் பழங்குடி இனத்தவர் கௌரவ தினம் கொண்டாடப்பட்டது.
- பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் வனப்பகுதிகளைப் பாதுகாக்க பழங்குடி இனத்தவர் போராடினர். இதற்காக அவர்கள் உயிர்த்தியாகமும் செய்தனர்.
- பழங்குடி இனத்தவர் நலனுக்காக முன்னாள் பிரதமர் வாஜ்பாய் தனி அமைச்சகத்தை உருவாக்கினார். நாட்டில் உள்ள பழங்குடி இனப்பகுதிகளின் மேம்பாட்டுக்கு இது முக்கியப்பங்காற்றி வருகிறது.